මුදල් හා ජනමාධ්‍ය අමාත්‍යාංශය
நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு
MINISTRY OF FINANCE AND MASS MEDIA

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01. ශ්‍රී ලංකාව
செயலகம், கொழும்பு 01. இலங்கை
The Secretariat, Colombo 01. Sri Lanka

කාර්යාලය - මුදල් / அலுவலகம் - நிதி / Office - Finance: (+94)-11-2484500, (+94)-11-2484600, (+94)-11-2484700
කාර්යාලය - ජනමාධ්‍ය / அலுவலகம் - வெகுசன ஊடக / Office - Mass Media: (+94)-11-2513459, (+94)-11-2513498, (+94)-11-2512324
ෆැක්ස් - මුදල් / பெக்ஸ் - நிதி / Fax - Finance: (+94)-11-2449823
ෆැක්ස් - ජනමාධ්‍ය / பெக்ஸ் - வெகுசன ஊடக / Fax - Mass Media: (+94)-11-2513458
වෙබ් අඩවි / வெப் சைட்கள் / Websites: www.treasury.gov.lk, www.media.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No. BD/GPS 121/9/23 - (2018)
ඔබේ අංකය / உமது இல. / Your No.
දිනය / திகதி / Date 2018.06.01

**தேசிய வரவுசெலவுத்திட்டச் சுற்றறிக்கை இல: 02/2018**

பிரதேச செயலாளர்கள் அனைவருக்கும்

கனம் ஐயா/அம்மணி

**பிரதேச செயலக மட்டத்தில் நடைபெறுகின்ற அபிவிருத்தி கருத்திட்டங்கள் அனைத்தினதும் விபரங்களை ஒன்று சேர்க்கின்ற பலநோக்கு தரவுத்தளமொன்றினை தாபித்தல்**

அரசாங்கத்தின் பலநோக்கு அபிவிருத்திப் பணிகளின் பயன்பாட்டிற்காக பிரதேச செயலக மட்டத்தில் அபிவிருத்தி கருத்திட்டங்கள் உள்ளடங்களாக அனைத்து தகவல்களையும் ஒன்றுசேர்த்த விரிவான தரவுத்தளமொன்று நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சினால் தயாரிக்கப்பட்டுவருகின்றது.

02. அரசாங்க நிறுவனங்கள் பலவற்றினால் பல்வேறு பயன்பாட்டு நோக்கங்களுக்காகத் தயாரிக்கப்பட்டுள்ள கணினி முறைமைகள் பிரதேச, மாவட்ட மற்றும் தேசிய மட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், கொள்கை உருவாக்கச் செயன்முறை மற்றும் சிறந்த கொள்கை உருவாக்கத்திற்குத் தேவையான இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை பெற்றுக் கொள்ள முடியுமான வகையில் விரிவானதும் பயன்படுத்துவதற்கு இலகுவான முறையிலுமான முறைமையொன்றினை தயாரிப்பதற்கான தேவையினை அரசாங்கம் உணர்ந்துள்ளது. அதேவேளை, இந்நாட்டில் ஏற்படும் அவசரகால நிலைமைகள் அதிகரித்துவரும் போக்கு காணப்படுவதனால் அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கவேண்டியுள்ளது.

03. இதனால், அனைத்து அரசாங்க நிறுவனங்களுடனும் கலந்துரையாடி தரவுத்தளமொன்றினை தயாரிக்கும் செயன்முறையில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு ஈடுபட்டுள்ளது. இச்செயன்முறையில், பலநோக்கு தரவுத்தளமொன்றினை தயாரிக்கும் பணியினை நிறைவு செய்வதற்கு பிரதேச செயலாளர்களின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும். உத்தேச தரவுத்தள முறைமையானது மூன்று கட்டங்களாக சேர்த்துக்கொள்ளப்படவுள்ள பின்வரும் தகவல்களை உள்ளடக்கியிருக்கும்.

அ. ஏற்கனவே சேர்க்கப்பட்டு மாற்றப்படமுடியாத பிரதேச செயலகங்கள் ஒவ்வொன்றினதும் அடிப்படைத் தகவல்கள்

ஆ. வருடாந்தம்/வருடத்திற்கு இருமுறை இற்றைப்படுத்தப்படும் பொதுவான தகவல்கள்

இ. வாராந்தம்/மாதாந்தம் இற்றைப்படுத்தப்படும் நடைமுறைத் தகவல்கள்

04. இந்நோக்கத்திற்காக ஒவ்வொரு பிரதேச செயலகத்தினாலும் கிரமமாக உரிய தகவல்களை உட்சேர்ப்பதற்கு இணையத்தளமொன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது. இவ்விணையத்தளத்தின் வடிவமைப்பு நிறைவு பெறும் வரையில், தற்பொழுது கிராம சேவையாளர் பிரிவு மட்டத்தில் இடம்பெற்று வருகின்ற அபிவிருத்தி பணிகள் அனைத்தையும், முன்னுரிமை அடிப்படையிலான உத்தேச அல்லது எதிர்கால அபிவிருத்தி கருத்திட்டங்களையும் இனங்காணுமாறு அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

05. குறித்த இணையத்தளத்தில் தகவல்களை பதிவேற்றுவதற்கு ஏற்றவாறு உரிய தகவல்களை சேகரித்து ஒருங்கிணைப்பதற்கான அவசியம் ஏற்பட்டுள்ளது. இதற்கென சாத்தியமான அனைத்துத் தகவல்களையும் உள்ளடக்கும் வகையில் தயாரிக்கப்பட்ட மாதிரிப்படிவத்தின் பிரதி பின்னிணைப்பு 1 ஆக இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

06. இதற்கமைவாக, குறித்த இணையத்தளத்தில் தகவல்களை ஒன்று சேர்ப்பதற்கு முடியுமான வகையில், உரிய தகவல்கள் அனைத்தையும் 2018 யூன் 25 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் இணைக்கப்பட்டுள்ள படிவத்திற்கமைவாக ஒன்றுதிரட்டுமாறு நீங்கள் வேண்டப்படுகின்றீர்கள். இந்நடவடிக்கை நிறைவுற்றதுடன் அவ்வப்போது அமைச்சினால் உரிய வழிகாட்டல்கள் உங்களுக்கு வழங்கப்படும்.

இது தொடர்பான உங்களது ஒத்துழைப்பு பெரிதும் வேண்டப்கின்றது.

**ஒப்பம்/ஏ.ஆர். தேசப்பிரிய**
**திறைசேரியின் பிரதிச் செயலாளர்**

பிரதிகள்:

1. அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள்
2. செயலாளர், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு
3. அனைத்து மாவட்ட செயலாளர்கள்

பின்னிணைப்பு 1

பிரதேச செயலகத்தின் பெயர் : ………………………………………………………………….

## தரவுத்தளத்திற்கு நடைமுறையிலுள்ள அபிவிருத்தித் தகவல்களை இற்றைப்படுத்தல்

**(அ) நிறைவுற்ற கருத்திட்டங்கள் பற்றிய தகவல்**

| 1 | 2 | 3 | 4 | 5 | | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கருத்திட்டம் தொடர்பான நிரல் அமைச்சு | கருத்திட்டத்தின் பெயர் | கருத்திட்டத்தின் பிரதான நோக்கம் | கருத்திட்டத்தின் அமைவிடம் (கி.சே. பிரிவு) | கருத்திட்டக் காலம் (செயற்படுத்துகை மற்றும் நிறைவுத் திகதி) | | பிரதான நடவடிக்கைகள் | மொத்த மதிப்பீட்டுத் தொகை (ரூபா மில்.) | | | | |
| | | | | இலிருந்து | வரை | | மொத்த செலவின மதிப்பீடு (ரூபா மில்.) | உள்நாட்டு நிதி | வெளிநாட்டு நிதி | கருத்திட்டத்தின் உண்மையான செலவினம் (ரூபா மில்.) | கருத்திட்டத்தின் கொடை வழங்குநர் |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |

**(ஆ) தற்பொழுது இடம்பெற்றுவரும் கருத்திட்டங்கள்**

| 1 | 2 | 3 | 4 | 5 | | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கருத்திட்டம் தொடர்பான நிரல் அமைச்சு | கருத்திட்டத்தின் அமைவிடம் (கி.சே. பிரிவு) | கருத்திட்டத்தின் பெயர் | கருத்திட்டத்தின் பிரதான நோக்கம் | கருத்திட்டக் காலம் (செயற்படுத்துகை மற்றும் நிறைவுத் திகதி) | | பிரதான நடவடிக்கைகள் | மொத்த மதிப்பீட்டுத் தொகை (ரூபா மில்.) | | | | 2018 வரவு செலவுத்திட்ட ஏற்பாடு (ரூபா மில்.) | 2018 மே அன்றுள்ளவாறு திரட்டிய செலவினம் (ரூபா மில்.) |
| | | | | இலிருந்து | வரை | | மொத்த செலவின மதிப்பீடு (ரூபா மில்.) | உள்நாட்டு நிதி | வெளிநாட்டு நிதி | கருத்திட்ட கொடை வழங்குநர் | | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |

**(இ) புதிய உத்தேச கருத்திட்டங்கள்**

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| கருத்திட்டத்தின் பெயர் | கருத்திட்டத்தின் அமைவிடம் (கி.சே. பிரிவு) | கருத்திட்டத்தின் பிரதான நோக்கம் | பிரதான நடவடிக்கைகள் | மதிப்பிடப்பட்ட செலவினம் (ரூபா மில்.) |
| | | | | |
| | | | | |